# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - உண்ணுஞ்சோறு
## ஆழ்வார் தாரக போஷக போக்யங்கள் கண்ணன் என்று உணர்ந்து திருக்கோளூரில் ஈடுபட்டதை, தலைவன் நகர் நோக்கிச் சென்ற தலைமகளைப் பற்றித் தாய் இரங்கும் பாசுரத்தாலே அருளிச் செய்தல்

** உண்ணும் சோறு பருகு நீர் *
        தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் * எம்பெருமான் என்றென்றே *
        கண்கள் நீர்கள் மல்கி **
மண்ணினுள் அவன் சீர் * வளம் மிக்க
        அவன் ஊர் வினவி *
திண்ணம் என் இள மான் புகும் ஊர் *
        திருக்கோளூரே 1

ஊரும் நாடும் உலகமும் *
        தன்னைப் போல் * அவனுடைய
பேரும் தார்களுமே பிதற்றக் *
        கற்பு வான் இடறி **
சேரு நல் வளம் சேர் * பழனத்
        திருக்கோளூர்க்கே *
போருங்கொல்? உரையீர் * கொடியேன்
        கொடி பூவைகளே! 2

பூவை பைங்கிளிகள் * பந்து
        தூதை பூம் புட்டில்கள் *
யாவையும் திருமால் * திரு நாமங்களே
        கூவி எழும் ** என்
பாவை போய் இனித் * தண் பழனத்
        திருக்கோளூர்க்கே *
கோவை வாய் துடிப்ப * மழைக் கண்ணொடு
        என் செய்யுங்கொலோ? 3

கொல்லை என்பர் கொலோ? * குணம்
        மிக்கனள் என்பர் கொலோ? *
சில்லை வாய்ப் பெண்டுகள் * அயற்
        சேரி உள்ளாரும் எல்லே! **
செல்வம் மல்கி அவன் கிடந்த *
        திருக்கோளூர்க்கே *
மெல் இடை நுடங்க * இள மான்
        செல்ல மேவினளே 4

மேவி நைந்து நைந்து
விளையாடல் உறாள் * என் சிறுத்
தேவி போய் * இனித் தன்
திருமால் * திருக்கோளூரில் **
பூவியல் பொழிலும் * தடமும்
அவன் கோயிலும் கண்டு *
ஆவி உள் குளிர * எங்ஙனே
உகக்குங்கொல் இன்றே? 5

இன்று எனக்கு உதவாது அகன்ற *
இள மான் இனிப் போய் *
தென்திசைத் திலதம் அனைய *
திருக்கோளூர்க்கே
சென்று ** தன் திருமால் திருக் கண்ணும் *
செவ்வாயும் கண்டு *
நின்று நின்று நையும் *
நெடுங்கண்கள் பனி மல்கவே 6

மல்கு நீர்க் கண்ணொடு *
மையல் உற்ற மனத்தனளாய் *
அல்லும் நன்பகலும் *
நெடுமால் என்று அழைத்து இனிப் போய் **
செல்வம் மல்கி அவன்
கிடந்த * திருக்கோளூர்க்கே *
ஒல்கி ஒல்கி நடந்து *
எங்ஙனே புகுங்கொல் ஒசிந்தே? 7

ஒசிந்த நுண்ணிடை மேல் * கையை
வைத்து நொந்து நொந்து *
கசிந்த நெஞ்சினளாய்க் * கண்ண நீர்
துளும்பச் செல்லுங்கொல்? **
ஒசிந்த ஒண்மலராள் கொழுனன் *
திருக்கோளூர்க்கே *
கசிந்த நெஞ்சினளாய் * எம்மை
நீத்த எம் காரிகையே 8

காரியம் நல்லனகள் அவை காணில் * என்
கண்ணனுக்கு என்று *
ஈரியாய் இருப்பாள் * இதெல்லாம்
கிடக்க இனிப் போய் **
சேரி பல் பழி தூய் இரைப்பத் *
திருக்கோளூர்க்கே *
நேர் இழை நடந்தாள் * எம்மை
ஒன்றும் நினைத்திலளே 9

நினைக்கிலேன் தெய்வங்காள்! * நெடுங்கண்
இள மான் இனிப் போய் *
அனைத்து உலகும் உடைய *
அரவிந்த லோசனனை **
தினைத் தனையும் விடாள் * அவன் சேர்
திருக்கோளூர்க்கே *
மனைக்கு வான் பழியும் நினையாள் *
செல்ல வைத்தனளே 10

** வைத்த மா நிதியாம் *
மதுசூதனையே அலற்றி *
கொத்தலர் பொழில் சூழ் * குருகூர்ச்
சடகோபன் சொன்ன **
பத்து நூற்றுள் இப்பத்து *
அவன் சேர் திருக்கோளூர்க்கே *
சித்தம் வைத்து உரைப்பார் *
திகழ் பொன்னுலகு ஆள்வாரே 11

**அடிவரவு:** உண் ஊரும் பூவை கொல்லை மேவி இன்று மல்கு ஒசிந்த காரியம் நினை வைத்த பொன்

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---